# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 20/2022** **நாள்: 02.02.2022**

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் தேர்தல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மாதிரி நடத்தை விதிகள் பின்பற்றுவது, வேட்பு மனு தாக்கல் செய்த விபரம், கோவிட்-19 வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடிப்பது உள்ளிட்டவை தொடர்பாக ஆய்வுக்கூட்டம் இன்று (2.2.2022) பிற்பகல் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.**

21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 490 பேரூராட்சிகளுக்கான நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல்களுக்கான வாக்குப்பதிவு 19.02.2022 அன்று ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்கள் நேர்மையான முறையில் நடத்துவது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் காணொலிக் காட்சி (Video Conferencing) வாயிலாக, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார் இ.ஆ.ப .,(ஓய்வு) அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ. சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் இன்று (02.02.2022) நடைபெற்றது.

இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை அமைதியாக நடத்துவதற்கு கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

சட்டமன்ற வாக்காளர்கள் அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களுக்கான துணை வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்ட விவரம், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு 31.1.2022 அன்று பயிற்சி நடத்தப்பட்டபோது வருகைதராத அலுவலர்களின் சதவீதம், தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அறைகளில் CCTV செய்யப்பட்டது குறித்தும், கோவிட்-19 வழிகாட்டு நெறிமுறைகளை வேட்புமனு தாக்கலின்போது கடைப்பிடித்த விவரம் மற்றும் நாளது தேதிவரை பெறப்பட்ட மனுக்களை இணையதளத்தில் பதிவுகள் மேற்கொண்ட விவரம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற 25.1.2022 தேதிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி கோவிட்- 19 தொற்று வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் இவ்வாணையச் சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் ஆகியவற்றை தவறாது கடைப்பிடித்திடவும் அறிவுரைகள் வழங்கினார்கள்.

..2..

தேர்தல் பார்வையாளருக்கு ஒருங்கிணைப்பு அலுவலர் நியமனம் செய்த விவரம், பறக்கும் படையால் பொருட்கள் கைப்பற்றப்பட்ட விவரம், கோவிட்-19 வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்காத நேர்வில், வழக்கு தொடரப்பட்ட விவரம், தேர்தலுக்கு தேவையான பொருட்கள் உள்ளூர் கொள்முதல் செய்யப்பட்ட விவரம் குறித்தும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

தேர்தல் தொடர்பாக வழக்குகள் பதிவான விவரம் மற்றும் கோவிட்-19 தொற்று காரணமாக வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்/மனுக்களை ஆய்வு செய்தல்/ திரும்பப்பெறுதல் போன்ற நேர்வில் உடன் வரும் நபர்களின் எண்ணிக்கை இவ்வாணைய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி கடைபிடித்திடவும், அனைவரும் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளி கடைப்பிடிப்பதை கண்காணித்திடவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், உள்ளாட்சித் தேர்தல்களை அமைதியாக நடத்துவதற்கு தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் காவல்துறை அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். இரா.செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) திரு ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., காவல்துறை தலைவர் (தொழில்நுட்பம்) திருமதி மகேஸ்வரி, இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர் (சைபர் க்ரைம்) திருமதி சண்முகப்பிரியா, இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு.தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு.கி.அ.சுப்பிரமணியம், சட்ட ஆலோசகர் திரு க. வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

2/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்